பக்கங்கள் 13 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 13 வெள்ளிக்கிழமை 26.04.2024 அதிர்வு 270

## யாழ். இளைஞர் கொலை: மேலும் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பகுதியில் இளைஞர் ஒருவரைக் கடத்தி சித்திரவதைக்குள்ளாக்கி படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு 04

# மாங்குளம் விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சாவு!

## மேலும் 9 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

(கே.வசந்தன்)

முல்லைத்தீவு, முறிகண்டி ஏ 9 வீதியில் மாங்குளம், வசந்தநகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் 9 இராணுவச் சிப்பாய்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏ 9 வீதியில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பாரவூர்தியும் திருமுருகண்டி பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்குத் திரும்ப முற்பட்ட கப் ரக வாகனமும் இன்று காலை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இராணுவச் சிப்பாயின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# பிள்ளையானைக் கைது செய்து விசாரணை நடத்தினால் அனைத்துக் கொலைகளின் உண்மைகளும் வெளிவரும்

## நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



**"தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையானைக் கைது செய்து விசாரணை நடத்தினால் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு கொலைகள் தொடர் பான உண்மைகளை அறிந்துகொள்ள முடியும்."**



– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெறுமாக இருந்தால் அதில் சாட்சி சொல்வதற்குப் பலரும் இருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் 2019ஆம் ஆண்டில் நடந்திருந் 04

# தமிழரசின் நிறுவுநர் தந்தை செல்வாவின் 47 ஆவது நினைவேந்தல் நிகழ்வு யாழில்






விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்



# முகமாலையில் மனித எச்சங்கள் மீட்பு!

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை கண்ணிவெடி அகற்றலின்போது மனித எச்சங்களுடன் கூடிய ஆடை ஒன்றும் இனங்காணப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ ாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

தொடர்ந்து பொலிஸார் மாவட்ட நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் இஸ்மாத் ஜெமில் சம்பவ இடத்துக்குச் சென்று குறித்த மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியைப் பார்வையிட்டார்.

தொடர்ந்தும் அந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுக்குமாறும், கிடைக்கப் பெறு கின்ற எச்சங்கள் மற்றும் தடயங்கள் தொடர்பாக பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு செல்லுமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன், கிடைக்கப்பெற்ற மனித எச்சங்களை சட்ட வைத்திய அதிகாரி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பி வைக்குமாறும் பணித்தார்.

இது தொடர்பில் எதிர்வரும் திங்கட் கிழமை சம்பவ இடத்தை மீண்டும் சென்று பார்வையிடுவதாகவும் நீதிவான் தெரிவித்தார்.

# அமைச்சரவையில் இருந்து விஜயதாஸவை நீக்குங்கள்

## ஜனாதிபதியிடம் மொட்டுக் கட்சி மீண்டும் கோரிக்கை

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வை அமைச்சரவையில் இருந்து நீக்கு மாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது எனத் தெரியவருகின்றது.

எதிரணி அரசியல் நடத்துகின்றோம் எனக் கூறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதா லும், அக்கட்சியில் பதவியை ஏற்றதா லும் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் எனக் கோரப் பட்டுள்ளது.

விஜயதாஸவுக்குப் பதிலாக அமைச்சரவைக்குள் தம்மிக்க பெரே ராவை உள்வாங்குமாறும் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்தக் கோரிக்கையை ஏற்று ஜனா திபதி அமைச்சரவையை மறுசீரமைத்



தால் நீதி அமைச்சு பதவி சுசில் பிரேமஜயந்தவுக்கும், கல்வி அமைச்சு தம்மிக்க பெரேராவுக்கும் வழங்கபடக் கூடும் என அறியமுடிகின்றது.




# தமிழரசின் நிறுவுநர் தந்தை செல்வாவின் 47 ஆவது நினைவேந்தல் நிகழ்வு யாழில்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவு நாளும் நினைவுப் பேருரையும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வநாயகம் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

தந்தை செல்வாவின் தூபிக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், “இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புக்களும் சவால்களும்” எனும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றினார்

தன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சியின் மூத்த பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.










# ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு?

## மே நடுப் பகுதியில் கருத்துக் கணிப்பு அறிக்கை

ஜனாதிபதித் தேர்தல் கள நிலைவரம் எவ்வாறு உள்ளது, தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு என்பன உள்ளிட்ட விடயங்களை ஆராய்ந்து வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வு அமைப்புகள், அது தொடர்பான கருத்துக் கணிப்பு அறிக்கையை மே நடுப் பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கவுள்ளன என்று தெரியவருகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நிலைப்பாட்டில் தற்போது இருக்கும் ஜனாதிபதி, மேற்படி அறிக்கைகளை ஆராய்ந்த பின்னரே இறுதியானதொரு முடிவை எடுத்து அது பற்றி அதிகாரபூர்வமாக அறிவிப்பார் எனவும் அறிமுடிகின்றது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பனவும் கிராமிய மட்டத்தில் கருத்துக் கணிப்புக்களை நடத்தி வருகின்றன. இதன்போது பெறப்படும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு பிரசார வியூகம் அமைக்கப்படவுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்துக்கான உள்ளடக்கங்களும் செய்யப்படவுள்ளன எனவும் தெரியவருகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பிள்ளையானைக் கைது...

தாலும் அதனுடன் தொடர்புடைய குழுக்கள் 2005ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டில் செயற்பட்டு வந்துள்ளன.

இது தொடர்பில் அடிக்கடி கூறியிருந்தாலும் இதன் பாரதூரத்தன்மை தொடர்பில் புரிந்துகொள்ளாது இருக்கின்றனர். எவ்வாறாயினும் 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பில் மீண்டும் சி.ஐ.டி. விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று நாம் செய்தியொன்றைப் பார்த்திருந்தோம். காத்தான்குடியில் பள்ளியொன்றினுள் இரண்டு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் புலனாய்வுத்துறையுடன் சம்பந்தப்பட்ட மூன்று இனங்களையும் சேர்ந்த புலனாய்வுக் குழு அதிகாரிகளின் குழுவொன்றே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன.

2004ஆம் ஆண்டில் ஈமானிய நெஞ்சங்கள் என்ற அமைப்பொன்று அமைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பாயிஸ், ஆமி மொஹிதீன், கலீல் ஆகிய மூவரையும் உள்ளடக்கியதாக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. கலீல் என்ற நபர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் சிறைக்குச் சென்று விடுதலையானவர்.

2009ஆம் ஆண்டில் திருகோணமலையில் 6 வயது வர்ஷா என்ற சிறுமி பெற்றோரிடம் கப்பம் கோரி கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலைக்குப் பொறுப்பான மேர்வின் என்பவர் கைது செய்யப்பட்டார். ஜனார்த்தனர், நிசாந்தன், ரெஜினோல்ட் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பின்னர் பொலிஸாரின் பொறுப்பிலிருந்தபோதே உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை 8 வயது சிறுமி ஒருவரும் கப்பம் கோரி 2009இல் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அந்தச் சம்பவம் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பின்னர் அவர்கள் நால்வரும் அரச படையினரால் கொலை செய்யப்பட்டனர்.

புலனாய்வுப் பிரிவின் குழுவினர் தமது நோக்கத்துக்காகக் கப்பம் பெறும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன், அதன் பின்னர் கைது செய்யப்படுபவர்களைக் கொல்லும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு பலர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலுக்கும் இடையே என்ன தொடர்பு என்று நினைக்கலாம். ஆனால், 2008 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டு கிழக்கில் ஸ்தீரமற்ற நிலைக்குக் கொண்டு செல்ல பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறாகப் பரிசோதிக்கப்பட்ட விடயங்களே பின்னர் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினக் குன்டுத் தாக்குதலின் பின்னர் பல்வேறு தகவல்கள் வெளியாகின்றன. பிள்ளையான் உள்ளே இருந்தால் அவர் பலவற்றைக் கூறலாம் என்பதனால் அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் பிள்ளையானுடன் கைது செய்யப்பட்ட கஜன் மாமா என்பவர் சில மாதங்களுக்கு முன்னர் திடீரென உயிரிழந்துள்ளார். மரண பரிசோதனைக்கு இடமளிக்காது அவரின் உடலை எரித்துள்ளனர்.

அதனால் 2005ஆம் ஆண்டு முதல் ஈஸ்டர் தாக்குதல் வரை இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுக்குத் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்குத் தொடர்பு இருக்கின்றது. அதனால் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்தக் கட்சியின் தலைவரைக் கைது செய்து விசாரணை நடத்தினால் இது தொடர்பான அனைத்து உண்மைகளையும் தெரிந்துகொள்ளலாம். எனவே, மட்டக்களப்பு மாவட்ட வாக்குகளைப் பார்க்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கஅவரைக் கைது செய்து விசாரணை நடத்த வேண்டும்." – என்றார்.

### வயாழ். இளைஞர்...

வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி காரைநகர் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு,வீடுதிரும்பிக்கொண்டிருந்த தம்பதியினரைப் பொன்னாலை பாலத்துக்கு அருகில் உள்ள கடற்படை முகாமுக்கு முன்பாக வைத்து வன்முறைக் கும்பல் கடத்தி சென்று, கணவனைச் சித்திரவதைக்குள்ளாக்கிப் படுகொலை செய்ததுடன் மனைவியை வீதியில் இறக்கி விட்டுச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் இது வரையில் 9 பேரை சந்தேகத்தில் கைது



செய்து நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் நீதிமன்றால் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவர் காரைநகர் பகுதியில் தலைமறைவாக இருந்த நிலையில் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



# கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக புதிய கட்டடம் இன்று திறப்பு

(எஸ்.கீதபொன்கலன், நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்துக்கான புதிய கட்டடம் ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண அரச உத்தியோகஸ்தர்கள் அவர்களின் பணிகளை சரியாக முன்னெடுக்கத் தங்களுக்கு போதுமான இட வசதிகள் இல்லை எனவும், தங்களுக்குத் தளபாட வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதி பொருளாதார நெருக்கடியால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் அக்கட்டடத்தை நிர்மாணித்து தருமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

அக்கோரிக்கையின் பிரகாரம் ஆளுநர் செந்தில் தொண்டமானின் 241 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு, கிழக்கு மாகாண



அரச உத்தியோகஸ்தர்கள் எவ்வித இன்னல்களும் இன்றி தங்களது கடமைகளை திறம்பட செய்ய அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதி ஆளுநரால் இன்று திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டது. அரச உத்தியோகஸ்தர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னால்...

ஐந்து வருடங்களுக்கு முந்திய ஈஸ்டர் குண்டு தாக்குதல் விவகாரம் இப்போது மீண்டும் நாடாளுமன்ற விவாதத்துடன் சூடு பிடித்திருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதான கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் குற்றச்சாட்டு, அதற்கு கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய மறுப்பு, அதையொட்டி நாடாளுமன்றத்தில் பல தலைவர்களும் தெரிவித்த கருத்துக்கள் என்று விடயங்கள் களேபரமாகி இருக்கின்றன.

எப்படியாயினும் நீதி பிறந்தால் சரி. ஆனால் அது கிட்டும் சாத்தியம் தென்படுவதாகத் தெரியவில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதிக்கம் செலுத்திய விடயம் இந்தக் குண்டுத் தாக்குதல்தான். அதன் விளைவு, மழை விட்டும் தூவானம் ஓயாத மாதிரி, இந்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்திலும் மீண்டும் பேசு பொருளாகி வெளிக் கிளம்பி இருக்கின்றது.

''பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனைக் கைது செய்து விசாரணை நடத்தினால் 2005 ஆண்டு முதல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் வரையிலான அனைத்து உண்மைத் தகவல்களையும் அறிந்துகொள்ளலாம்'' - என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்திருக்கின்றார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவோ,

இலங்கைப் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கிடையிலான முரண்பாடு மற்றும் மோதல்களே உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மறைக்கப்படுகின்றமைக்கு பிரதான காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

''புலனாய்வுத் துறையினரால் விசாரணைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உண்மைகள் மறைக்கப்பட்டமை மாத்திமல்ல, தாக்குதல்களுடன் தொடர்பில்லாதவர்களையும் இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புபடுத்தவும் முற்பட்டுள்ளனர். புலனாய்வுத்துறை அதிகரிகளுக்கு இடையிலான கடும் மோதல்கள் மற்றும் தகவல்கள் மறைக்கப்படுகின்றமையே இந்த விசாரணைகளில் தொடர்ந்து தாமதம் ஏற்படக் காரணமாகும்.'' - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அது உண்மையாக இருக்கலாம். ஆனால் புலனாய்வுத்துறையினர் இடையேயான முரண்பாடுகள் மாத்திரம் இந்த விடயத்தில் உண்மைகள் கண்டறியப்படாமல் - சூத்திரதாரிகள் அம்பலப்படுத்தப்படாமல் - சதிகாரர்கள் வெளிப்படுத்தப்படாமல் - மூடி மறைக்கப்படுவதற்குக் காரணம் அல்ல. அதையும் தாண்டி இதில் பல அம்சங்கள் புதைந்துள்ளன.

உண்மைகளையும் மூல சூத்திரதாரிகளையும் கண்டறிவதில் அரசியல் தலைமைத்துவங்களுக்கு இருந்த மாறுபாடான - முரண்நிலையான - கருத்து வேறுபாடுகளே இவ் விடயத்தில் நீதி நியாயமான - பக்கச்சார்பற்ற - நேர்மையான - விசாரணைகள் இடம்பெறாமல் போனமைக்கு முக்கிய காரணமாகும்.

வேண்டுமானால், அரசியல் தலைமைத்துவங்களின் இத்தகைய முரண்பாடான நிலைப்பாடுகளை அறிந்து கொண்டு, அதற்கேற்ப புலனாய்வுத் துறையினர் தட்டை மாற்றிப் போட்டு படம் காட்டியமையால் குழப்பம் ஏற்பட்டிருக்க முடியும்.

ஆயினும், இந்தக் கொடூரங்களின் சூத்திரதாரிகளை - அவர்களின் நோக்கங்களை - கண்டறிவதில் ஆட்சித் தலைமைகளின் சிரத்தை இல்லாமல் போனமையே இவ் விடயம் குழம்பவும், புலனாய்வாளர்களிடையே முட்டுப்பாடுகள் ஏற்படவும் காரணமாகும்.

தம் மீது கர்தினால் மல்கம் ரஞ்சித் சுமத்திய குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்தாலும் கூட, அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வரையான காலத்தில் இந்தக் குண்டுத் தாக்குதல் குறித்து விசாரித்து வந்த புலனாய்வாளர்களை சேவையிலிருந்து விலக்கி, ஒதுக்கி, அச்சுறுத்தி, வேறு ஆள்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தார் என்பதும் -

அது வரையில் இவ்விடயத்தை நீதி, நேர்மையான முறைகளில் கையாண்டு வந்த புலனாய்வு அதிகாரிகள் கோட்டாபயவின் தரப்பினரால் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டு, தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, வீட்டுக்கு அனுப்பப்பட்டமையுடன் சிலர் சிறை சென்றனர் என்பதும் -

அடியோடு மறுக்க - மறைக்க - கூடிய விடயங்கள் அல்ல.

கோட்டாபய ராஜபக்ஷ இப்போது என்ன திசையில் விடயத்தைத் திரித்துப் புதுத் தகவல்களை - கதைகளை - தெரிவித்தாலும், இந்தக் குண்டு தாக்குதல் அவரை அதிகாரத்தில் ஏற்றுவதற்காகச் செய்யப்பட்ட சதி நாசை வேலைதான் என்பது இலகுவில் புறமொதுக்கக் கூடிய விடயம் அல்ல.

அது தொடர்பில் நீதி, நேர்மையான விசாரணைக்கு அவர் இடமளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் இருந்தும் அவர் இலகுவில் தப்பி விட முடியாது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM SUPERMARKET · GSM · குணம்ஸ் சுப்பர்மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week

### till April 28th



LOWEST PRICE · 8 LB 7.99 $ · Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE · LB 1.99$ · Only at GUNAAM'S SUPER MARKET




EggPlant




LOWEST PRICE · 11.99$ · Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE · 7.99$ · Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் கோழி

LOWEST PRICE · LB 3.99$ · Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

LOWEST PRICE · LB 8.99$ · Only at GUNAAM'S SUPER MARKET



விளைமீன்

**Gunaam's super market இந்த வாரம் அள்ளித்தரும் super deal அனைத்து பலசரக்குப் பொருட்கள் தாயகத்து பழவகைகள், மீன், இறைச்சி, மரக்கறி வகைகள் மிக மிக குறைந்த விலையில்..**

| | |
|---|---|
| Harishchandra pappadam 5 for | -$5.00 |
| 200g Tamarind 5 for | -$5.00 |
| Kottu Mee noodles 5 for | -$5.00 |
| Joy pappadam 5 for | -$5.00 |
| Maggi coconut milk powder | -$3.99 |
| Grace coconut milk powder | -$3.99 |
| MR.Goudas coconut milk powder | -$3.99 |
| 800g maggi coconut milk powder | -$12.99 |
| Niru tin fish 3 for | -$10.00 |
| Waadiya tin fish 3 for | -$10.00 |
| Delm tin fish 3 for | -$10.00 |
| Aroy-D coconut milk tin 3 for | - $10.00 |
| Piriya basmati rice | -$7.99 |
| Grace basmati rice | -$9.99 |
| Tusk brand basmati rice | -$9.99 |
| Ceycan கைக்குத்தரிசி | -$8.99 |
| ஷேசைர அவித்த மா | -$8.99 |
| Maharaja curry powder | -$11.99 |
| 3Lt MR.Goudas sunflower oil | -$8.99 |
| 4lb Mysoor dall | -$3.99 |
| Tip tip 6 for | -$10.00 |
| Baba payasam mix | -$2.99 |

| | |
|---|---|
| Narasu's coffee | -$4.99 |
| Baba uppuma mix | -$2.99 |
| Uruthira நாட்டு சர்க்கரை | -$3.99 |
| Maharaja rice flour | -$8.99 |
| Super deal Mr.Goudas | |
| 3lt sunflower oil | -$8.99 |
| கத்தரிக்காய் | -$1.99 lb |
| Drumstick | - $5.99 lb |
| சின்ன வெங்காயம் | -$5.99 lb |
| கருணைக்கி ழங்கு | -$4.99 lb |
| யாழ்ப்பாணத்து ராசவள்ளி | -$3.99 lb |
| Roma tomato | -$1.99 lb |
| விளைமீன் | -$8.99 lb |
| கருக்கனிப்பாரை | -$8.99 lb |
| ஓரா களைா | -$7.99 lb |
| சுராப்பாரை | -$7.99 lb |
| நெத்தலி | -$7.99 lb |
| பால்சுறா | -$6.99 lb |
| இறால் | -$3.99 lb |
| திருக்கை | -$5.99 lb |
| ஊர்க் கோழி | -$7.99 |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998



# மக்கள் குறைகேள் செயற்றிட்டத்தில் இணைந்தார் மன்னார் அரச அதிபர்!

(தலைமன்னார்)

மன்னார் தீவில் கடந்த 25 வருடங்களுக்கு முன் புதிதாக உருவாக்கப்பட்ட யோசவ்வாஸ் நகரில் 400இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற போதும் இங்கு மிகவும் அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படாது இருப்தாக மன்னார் அரச அதிபரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலாளராகக் கடமையேற்று முதன் முதலாக ஜோசப் வாஸ் நகர் பங்குக்கு 'மக்கள் குறை கேள்' என்ற செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக மன்னார் மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான கனகசபாபதி கனகேஸ்வரன் சென்றிருந்தார். அப்போது அங்கு பங்குத் தந்தை அருட்பணி எஸ். இராஜநாயகம் அடிகளார் தலைமையில் வரவேற்பு இடம்பெற்றது.

நேற்று வியாழக்கிழமை (25) இடம் பெற்ற இந்த நிகழ்வில் அங்குள்ள மக்களால் 11 அத்தியாவசிய தேவைகள் அரச அதிபரிடம் முன்வைக்கப்பட்டிருந்தன.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்த அரச அதிபர் விளையாட்டு மைதானம், ஆலய வளாகம் , கிராமத்தின் வீதிகள் மற்றும் முதியோர் சங்கம் என்பவற்றைப் பார்வையிட்டார்.

இந்த பகுதியில் 25 வருடங்களாக வாழ்ந்து வரும் 400 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் போதிய வசதிகள் இன்மையால் முகம் கொடுத்து வரும் அசௌகரியங்கள், தேவைப்பாடுகள் பொது மக்களால் முன்வைக்கப்பட்டன.



மன்னார் தீவுக்குள் வாழும் இவர்களுக்கு மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வரும் இந்தக் கிராம மக்களுக்கான ஒரு மீன்பிடித் துறை இதுவரையில் வழங்கப்படவில்லை.

மக்கள் தங்களுடைய சொந்தப் பணத்திலிருந்தே பல அபிவிருத்திகளை மேற்கொண்டாலும் அதற்கான அனுமதி பெற்றுக் கொள்தலில் உள்ள சிக்கல் நிலை போன்றவை அரச அதிபரிடம் முன்வைக்கப்பட்டன.

மக்கள் குறைகளைக் கேட்டறிந்த அரச அதிபர் கூடிய விரைவில் இதற்கான தீர்வைப் பெறுவதற்குத் தன்னாலான பணிகளை மேற்கொள்வார் என்று உறுதியளித்தார்.

பங்குத் தந்தை அருட்பணி இராஜநாயகம் அடிகளாரின் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட உதவிச் செயலாளர் டிலுஷன் பயஸ், மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திவாகரி , மன்னார் மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி விக்டர் சோசை அடிகளார், அருட்பணி டெனிக்கலிஸ்ரஸ் அடிகளார், அருட்பணி டெஸ்மன் அஞ்சலோ அடிகளார், கிராம உத்தி யோகத்தர், அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கிராமத்துக்கு முதன் முறையாக விஜயம் செய்த ஞாபகார்த்தமாக அரச அதிபருக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் மக்கள் சார்பில் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இளவாலைத் திருமறைக் கலாமன்ற வெள்ளிவிழா நாளை மறுதினம்

இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் (28) ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு இளவாலையில் அமைந்துள்ள கலைத்தூது கலைக்களரியில் ஆரம்பமாகி இடம் பெறவுள்ளன.

இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் செ. பியன்வெனு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருள்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் திருமதி சுபாஜினி மதியமுகன் மற்றும் யாழ். பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி சா.சிவரூபன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமாரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் மதத் தலைவர்களின் ஆசியுரைகள், வெள்ளி விழா மலர் வெளியீடு, நடனங்கள், நாடகம், நாட்டிய நாடகம், 'பண்டாரவன்னியன்' நாட்டுக்கூத்து உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.




# ஒலுவில் பிரதேசத்தில் பொதுக் கிணறுகள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகரித்துள்ள நீர்க் கட்டணத்தாலும், ஒலிவிலில் சில பிரதேசங்களில் மிக நீண்ட காலமாக நிலவி வந்த குடி தண்ணீர் சம்மந்தமான பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தரும் பொருட்டும் சம்மந்தப்பட்ட பயனாளிகள் பொதுக்கிணறுகள் அமைத்துத்தருமாறு கல்முனை ரஹ்மத் பவுண்டேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வை. டபிள்யூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் மிகவும் குறுகிய நாள்களுக்குள் பொதுக் கிணறுகளை நிர்மாணித்து பயனாளிகள் பாவனைக்காகத் திறந்து வைத்தார்.

இதன்போது பயனாளிகள், ஒலுவில் பிரதேச வாசிகள், நலன் விரும்பிகள், பவுண்டேசன் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தென்கிழக்குப் பல்கலையில் நூல்கள் அன்பளிப்பு



(நவாஸ்)

பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் இணைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் பல்கலைக் கழகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக பொது நூலகங்களை வலுவூட்டல் திட்டமானது பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுத்தீன் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுகின்து.

இதற்காக 'சேர்லின்' தென் கிழக்குப் பிராந்திய நூலக தகவல் வலையமைப்பானது பெரும் பங்காற்றி வருகின்றது.

இந்த வகையில் உலகப் புத்தக தினத்தை கொண்டாடும் முகமாக தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகமானது தெரிவு செய்யப்பட்ட 08 நூலகங்களுக்கு சுமார் 733 புத்தகங்களை வழங்கியது.

இதற்கான நூல்களை ஆஸ்திரேலியாவிலுள்ள வை.எம்.ரி. நிதியத்தினர் வழங்கியிருந்தனர்.

இதுவரை இந்த நிறுவனமானது சுமார் 6 ஆயிரத்து 341 புத்தகங்களை 04 கட்டங்களாக வழங்கியுள்ளது.

அனைத்து நூலகளும் இந்தப் பிரதேசத்திலுள்ள 25 பொது நூலகங்களுக்கும் 55 பாடசாலை நூலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூல்களின் மொத்தப் பெறுமானம் சுமார் 08 மில்லியன் ரூபா என்று சிரேஷ்ட உதவி நூலகரும் வெளிக்களப் பயிற்சி இணைப்பாளருமான எம். சி.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பின்வரும் நூலகங்கள் நூல்களைப் பெற்றுக்கொண்டன.

நிந்தவூர் பொது நூலகம், சாய்ந்தமருது பொது நூலகம், வாசிப்பு நிலையம் வீரமுனை, ஒலுவில் பொது நூலகம், ஒலுவில் அல்ஹம்றா வித்தியாலயம், சம்மாந்துறை அமிர்அலி வித்தியாலயம், மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை, அட்டாளைச்சேனை பொது நூலகம்.

இன்றைய நிகழ்வில் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், பிரயோக விஞ்ஞான பீடத்தில் பீடாதிபதி கலாநிதி எச்.எம். ஹாறுன், நூலகர் எம்.எம். றிபாயுத்தீன், பதிவாளர், நிதியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மந்தபோசனை ஊட்டச் சத்து தொடர்பான விழிப்புணர்வு


**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலக பகுதிக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட அரச அதிகாரிகளுக்கான மந்த போசனை தொடர்பான விழிப்புணர்வு தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று (26) இடம்பெற்றது. நிகழ்வு சக்தி மகளிர் அமைப்பின் மூலமாக இடம்பெற்றது.

மந்தபோசனே, உணவு பழக்க வழக்கங்கள்,கர்ப்பிணி தாய்மார்களின் ஆரோக்கியமான நிலை உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது விழிப்புணர்வூட்டப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கு வளவாளராக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தாய், சேய் நல மருத்துவ அதிகாரி வைத்தியர் ஏ.எச்.சமீம் கலந்து கொண்டார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப்,தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மலர்விழி உட்பட பொது சுகாதார மருத்துவ மாதுக்கள்,பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கல்வி அதிகாரிகள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.




# காஸா சிறுவர் நிதியத்துக்கு 5 மில்லியன் ரூபா கையளிப்பு

## கல்முனை பிராந்திய பொது நிறுவனங்கள் வழங்கின

**(நூருல் ஹுதா உமர் )**

காஸாவில் இடம்பெற்ற மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்துக்குக் கல்முனை வலயக் கல்வி அலுவலகம், கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் மற்றும் ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டேஷன் ஆகிய பொது நிறுவனங்களால் 50 லட்சம் ரூபா நிதி நன்கொடையாக இன்று (26) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிதி கையளிக்கும் நிகழ்வில் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜீர அபேவர்த்தன உட்பட அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

காஸா சிறுவர்களின் நல திட்டத்துக்காகக் கல்முனை கல்வி வலய உத்தியோகத்தர்கள், அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் பங்களிப்பில் 31 லட்சத்து 28 ஆயிரத்து 500 ரூபா நிதியும், கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் சார்பில் நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் தனவந்தர்களின் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற 15 லட்சத்து 89 ஆயிரம் ரூபா நிதியும், ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டேஷன் சார்பில் 3 லட்சம் ரூபா நிதியுமாக ஐந்து மில்லியன் ரூபா பணத்தை இன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தனர்.



# கல்விச் சாதனையாளர்கள் காரைதீவில் கௌரவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவில் நடப்பாண்டின் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

காரைதீவு விளையாட்டு கழகத்தின் 41ஆவது வருட சித்திரை புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது இந்தச் சாத னையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கழகத் தலைவர் வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் க.பொ.த. சாதாரண தரத்தில் 9 ஏ பெற்ற மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3ஏ சித்தி பெற்ற மாணவர்கள் 29 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதம அதிதியான விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் ஏனைய அதிதிகளான அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சி. ஜெகராஜன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் கலந்து கொண் டனர்.



# நானாட்டான் கமநல சேவைகள் பிரிவில் ட்ரோன் மூலம் ரசாயனம் விசுரும் பணி!

(மன்னார் )

நானாட்டான் கமநல சேவைகள் பிரிவில் உள்ள வஞ்சியன்குளம் கமக் காரர் அமைப்புக்கு உட்பட்ட வஞ்சியக் குளக்கண்டத்தில் இன்று (26) வெள் ளிக்கிழமை காலை ட்ரோன் மூலம் ரசாயனம் விசுரும் நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இதன் போது எம்.ஐ. 07 பயறுச் செய்கைக்கான இரசா யனம், விசுரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மஞ்சள் நோய்க்கு எதிர்ப்பு இனமான உளுந்து முன்மாதிரி துண்டச் செய்கை போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையர், விவ சாய மாகாண பிரதிப் பணிப்பாளர், கமநல அபிவி



ருத்தி உத்தியோகத்தர் மற்றும் கமநல, விவசாய திணைக் கள உத்தியோகத்தர்கள் விவசாயிகள் கலந்து கொண்ட னர்.



# வடக்குத் தமிழக உள் மாவட்டங்களில் 5 நாள்களுக்கு வெப்ப அலை வீசலாம்

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஏப். 26

அடுத்த ஐந்து நாள்களுக்கு வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருப்பவை வருமாறு:-

தமிழக பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுகிறது.

26.04.2024 முதல் 29.04.2024 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

30.04.2024 மற்றும் 01.05.2024 திகதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

02.05.2024: மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

26.04.2024 முதல் 30.04.2024 வரை: தமிழக உள் மாவட்டங்களில் அடுத்த ஐந்து தினங்களில் அதிகபட்ச வெப்பநிலை $2^{\circ}$ செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும். வட தமிழக உள் மாவட்டங்களில் அடுத்த ஐந்து தினங்களில் அதிகபட்ச வெப்பநிலை $3^{\circ}$-$5^{\circ}$ செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை வட தமிழக உள் மாவட்டங்களின் ஒருசில இடங்களில் $39^{\circ}$-$42^{\circ}$ செல்சியஸ், இதர தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் $35^{\circ}$-$39^{\circ}$ செல்சியஸ் இருக்கக்கூடும்.

26.04.2024 முதல் 30.04.2024 வரை: அடுத்த ஐந்து தினங்களில் வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும்.

இதர தமிழக மாவட்டங்கள் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம்.

# பாண்டிச்சேரியில் கிலி கிளப்பும் புலி!

புதுச்சேரி, ஏப். 26

தமிழகத்தில் காடுகளை அண்டிய நகரங்கள் பலவற்றில் சிறுத்தை மற்றும் புலிகள் பற்றிய விடயம் கிலியைக் கிளப்பி வருகையில், புதுச்சேரியிலும் புலி பற்றிய கிலி ஒன்று கிளம்பியிருக்கின்றது.

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்ட விடுகதை மாதிரி, நாயைப் புலியாக மாற்றி, அதை புலிபோல் பெயிண்ட் அடித்து வீதியில் உலாவவிட்டு பொதுமக்களை அச்சுறுத்திய சம்பவம் புதுச்சேரியில் அரங்கேறியுள்ளது.

புதுச்சேரி லாஸ்பேட்டை குறிஞ்சி நகர் பகுதியில் புலி உலாவுவதாக பொதுமக்களிடையே தகவல் பரவியது.

மலைவனப்பகுதியாக இருந்தால் புலி வரும், இங்கு எப்படி புலி வந்தது என்று பொதுமக்களிடையே கேள்வி எழுந்தது. உண்மையிலேயே புலி தான் வருகிறதா, அதனை பார்த்துவிட வேண்டும் என்று இளைஞர்கள் திட்டமிட்டனர்.



அப்போது புலி வருகிறது என்று சிலர் அங்கு கூச்சலிட்டவாறு சென்றனர்.

இதனை கேட்ட இளைஞர்கள் சிலர் அங்கு திரண்டு சென்றனர். அவர்கள் புலி என்று சொன்ன விலங்கை பார்த்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். ஏனென்றால் அது புலி அல்ல புலி வேஷத்தில் இருந்த நாய்.

அந்தப் பகுதியை சேர்ந்த சில விஷமிகள் தெரு நாய் உடலில் புலியைப் போல கோடுகளைப் பெயிண்டில் வரைந்து நாயை வீதிகளில் உலாவ விட்டுள்ளனர்.

இந்த புலி வேட நாய் கடந்த இரண்டு நாள்களாக குறிஞ்சி நகர் பகுதியில் உலாவி வருகிறது. இது குறித்து லாஸ்பேட்டை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

நாய்க்கு புலிவேஷமிட்ட விஷமிகள் யார் என்று அவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

# அழுத்தங்களுக்கு அடி பணிந்து ஹெய்டி பிரதமர் பதவி விலகினார்

மெக்சிகோ சிட்டி, ஏப்.26

ஹெய்டி நாட்டின் பிரதமர் ஏரியல் ஹென்றி தனது பதவியை நேற்று ராஜினாமாச் செய்தார்.

இடைக்காலப் பிரதமராக மைக்கெல் பேட்ரிக் போயிஸ்வர்ட் நியமிக்கப்பட்டுள்ளார் என ஊள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கரீபிய நாடான ஹெய்டியில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஆயுதக் குழுவினரின் வன்முறை தாக்குதல்களால் பல ஆண்டுகளாக மக்கள் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். 2021 இல் ஜனாதிபதி ஜோவனல் மோயிஸ் படுகொலை செய்யப்பட்ட பின் வன்முறை மேலும் அதிகரித்துள்ளது. ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் கடந்த மாதம் பெப்ரவரி 7 ஆம் திகதிக்குள் நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அரசாங்கம் தேர்தலை நடத்த தவறியதால் சமூக பதற்றம் அதிகரித்துள்ளது.

இதனையடுத்து பிரதமர் ஏரியல் ஹென்றி பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த பெப்ரவரி மாத இறுதியில் இருந்து தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில் உள்ள பொது இடங்கள் மீது ஆயுதக்குழுக்கள் தாக்குதல்களை நடத்தி வந்தனர். இந்தத் தொடர் வன்முறை மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு பணிந்த பிரதமர் ஏரியல் ஹென்றி, நாட்டை வழிநடத்த இடைக்கால கவுன்ஸில் உருவாக்கப்பட்டவுடன் தாம் பதவியை ராஜினாமாச் செய்வார் எனக் கடந்த மாதம் அறிவித்தார்.

இந்நிலையில், ஏரியல் ஹென்றி தனது பிரதமர் பதவியை நேற்று ராஜினாமா செய்தார். இவருக்குப் பதிலாக இடைக்கால பிரதமராக பொருளாதாரம் மற்றும் நிதி மந்திரி மைக்கெல் பேட்ரிக் போயிஸ்வர்ட் நியமிக்கப்பட்டுள்ளார் என ஊள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.மேலும் நாட்டை வழிநடத்த இடைக்கால கவுன்ஸில் நேற்று உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக ஹென்றி நேற்று ஒரு கடிதத்தை தனது சமூக ஊடகங்களில் வெளியிட்டார். அதில், 'அரசாங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், ஒத்துழைப்பாளர்களுக்கும், பொது நிர்வாகம், பாதுகாப்புப்படையினர் மற்றும் எனது ஆணையின் போது என்னுடன் இருந்த அனைவருக்கும் நன்றி. என்னுடன் இந்த சவால்களை எதிர்கொள்ள தைரியமாக இருந்த அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.' - என்று தெரிவித்திருந்தார்.



# 18 முதல் 60 வயதுடைய ஆண்கள் வெளிநாடு செல்ல உக்ரைன் தடை

## கட்டாய இராணுவச் சேர்ப்புக்கு வசதியாக

கீவ், ஏப். 26

உக்ரைனில் இராணுவத்தில் சேரும் வயதுடைய ஆண்கள் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் 3 ஆவது ஆண்டாக தொடர்ந்து வருகிறது. இந்தப் போரில் இருநாட்டு இராணுவங்களும் பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்களை இழந்துள்ளது. இதனால் இருநாடுகளுமே போர் முனையில் சண்டையிடுவதற்கு கட்டாயஈராணுவ சேவை மூலம் ஆள்களைச் சேர்த்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைனில் இராணுவத்தில் சேரும் வயதுடைய ஆண்கள் வெளிநாடு செல்வதற்கு அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக அரசு பிறப்பித்துள்ள உத்தரவில், "இராணுவ சேவைக்கு தகுதியுடைய 18 முதல் 60 வயதுடைய ஆண் உக்ரைனியர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான பாஸ்போர்ட்டுகளைப் பெற முடியாது. மே 18 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் புதிய விதிகள், ராணுவ சட்டத்தின் போது உக்ரைன் எல்லையை கடக்க அனுமதிக்கப்படும் உக்ரைனிய ஆண்களுக்கு பொருந்தாது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் - 4

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 26/04/2024

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடும் வறட்சிக்கான ஆபத்து

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 26

பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடுமையான வறட்சிக்கான ஆபத்து அதிகரிப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

C2▶

## ஒட்டாவாவில் 6 இலங்கையர்கள் கொலை; 2025 ஏப்ரல், மே மாதங்களில் விசாரணை!

ஒன்ராரியோ, ஏப்ரல் 26

மார்ச் மாதத்தில் ஒட்டாவா நகரில் ஆறு இலங்கையர்களை கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள 19 வயது சந்தேகநபர் மீதான ஆரம்ப விசாரணைகளுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெப்ரியோ டி-சொய்சா என்ற சந்தேகநபர் மீது ஆறு கொலைக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஒரு கொலை முயற்சி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 25ஆம் திகதி நீதிமன்றின் முன்னிலையான

C2▶





# அரசின் வரவு - செலவுத் திட்டம் கனடிய மக்களுக்கு அதிருப்தி!

தமது அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து கனடிய மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் இவ்வாறு அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

மில்லியன் கணக்கான வீடுகளை நிர்மாணிக்கும் அரசின் திட்டத்திற்கு வரவேற்பு வெளியிடப்பட்ட போதிலும் ஒட்டுமொத்த வரவு - செலவுத்திட்டம் குறித்த அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

லெட்ஜர்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

21 வீதமான மக்கள் மட்டுமே வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவினை வழங்கியுள்ளனர்.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தில், பல்வேறு யோசனைத் திட்டங்களை அறிவித்திருந்தது.

இணைய வழியில் எழுமாறான அடிப்படையில் இந்தக் கருத்துக் கணிப்பு மேற்கொளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் அல்பேர்ட்டா மக்கள் கூடுதல் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.





# எல்லைகளை மூடிய விடயம் உயர்நீதிமன்றம் விசாரிக்கும்

நியூபவுன்லாந்து, ஏப்ரல் 26 கொவிட்-19 ஆரம்ப காலப்பகுதியில் எல்லைகளை மூடிய விடயம் தொடர்பான மேன்முறையீட்டினை விசாரிப்பதற்கு கனடிய உயர்நீதிமன்றம் இணங்கியுள்ளது.

நோவா ஸ்கோச்சியாவின் கிம் டெய்லரினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வழக்கு, கனடிய சிவில்லிபர்ட்டீஸ்அசோசியேஷனினால் ஆதரவளிக்கப்பட்டது.

மாகாணத்தின் இந்தப் போக்குவரத்து தடையானது அரசமைப்புக்கு முரணானது என இவர்கள் முறையீடு செய்தனர்.

இந்தப் போக்குவரத்துத் தடை காரணமாக, நியூபவுன்லாந்து மற்றும் லெப்ரடோர் பகுதியில் உள்ள தமது வீட்டிற்கு, தமது தாயாரின் மரணத்திற்குச் செல்வதற்கு அனுமதியளிக்கவில்லை என டெய்லர் முறைப்பாடு செய்துள்ளார்.

## ஒட்டாவாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணிகள் வழக்கிற்கு முன்னரான விசாரணைகளை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திலும், 2025ஆம் ஆண்டு மே 12ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை ஆரம்ப விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் கண்டுள்ளனர்.

சந்தேக நபர் டி சொய்சா பிணை கோரும் திட்டத்தில் இல்லை என சந்தேக நபரின் சட்டத்தரணி கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

குற்றத்தின் தன்மை கருதி, அதிபாதுகாப்புடனான தடுப்புக் காவலில் அவர் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரிட்டிஷ்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் கொலம்பியாவின், வடகிழக்குப் பகுதியான சீவின்ட் அருகே, இந்தப் பருவ காலத்திற்கான முதலாவது காட்டுத்தீ வெளியேற்றல் உத்தரவு 24 மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்திருந்தது.

கடுமையான காற்றானது தீச்சுவாலையை அதிகரித்து, நெடுஞ்சாலை 97இல் நான்கு கிலோமீற்றர்களுக்கு பரவியதாக சீவின்ட் நகர மேயர் ஜூலியா நெல்சன் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் இருந்த 67 வீடுகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.



# கனேடிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவால் அறிமுகமாகின்றது புதிய தொழில்நுட்பம்

கனேடிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவினர் புதிய தொழில்நுட்பம் ஒன்றை அறிமுகம் செய்ய உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எல்லைப் பாதுகாப்பின் போது ஆட்களை இனங்காண முக அடையாளத் தொழில்நுட்பம் (facial recognition) தொலைபேசிகள் ஊடாக பயன்படுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முக அடையாளத் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் எல்லைப் பகுதிகளில் நேரத்தை சேமிக்க முடியும் என எல்லைப் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த தொழில்நுட்பத்தின் மூலம் பயணிகளின் நேரத்தை சேமிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதற்காக 25 மில்லியன் டொலர்கள் வரையில் செலவிடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பயணிகளின் கடவுச்சீட்டில் உள்ள படம், பயனர்களின் அலைபேசியில் எடுக்கப்பட்ட செல்ஃபியுடன் ஒப்பீடு செய்யப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.




# ஈரான் பாதுகாப்பு அமைச்சர் உட்பட மூவருக்கு தடை விதித்தது கனடா!

ஒன்ராறியோ, ஏப்ரல் 26

ஈரான் பாதுகாப்பு அமைச்சர் மீது கனடா தடை விதித்துள்ளது.

இம்மாதத்தின் ஆரம்பத்தில் இஸ்ரேல் மீது ஈரான் முன்னெடுத்த தாக்குதல்களின் எதிரொலியாகவே இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தடையில் இரு ஈரானிய நிறுவனங்களும், இரு இராணுவத் தலைவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் மொஹமட் ரெஷா மற்றும் ஈரானின் சிரேஷ்ட இராணுவ அமைப்பு என்பன இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடைகளையடுத்து, தடை செய்யப்பட்ட நபர்கள் கனடாவிற்குள் பிரவேசிப்பதையோ, அல்லது கனடியர்களுடன் பொருளாதார கொடுக்கல், வாங்கல்களை செய்வதனையோ இது தடுக்கின்றது.

## ஸ்கார்பரோ தொடர்மாடியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு



ஒன்ராறியோ, ஏப்ரல் 26

ஸ்கார்பரோ தொடர்மாடி குடியிருப்புப் பகுதியில் ஆணொருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

லோரன்ஸ் எவனியு ஈஸ்ட் மற்றும் மோர்னிங்சைட் பகுதியில் வியாழக்கிழமை காலை பொலிஸாருக்கு மருத்துவ உதவிக்கான அழைப்பு ஒன்று வந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் 40 வயதான ஆணொருவரின் கத்திக்குத்துக்களுடனான நபரைக் கண்டறிந்துள்ளனர்.

அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கு பொலிஸார் முயற்சித்த போதிலும், சிகிச்சைப் பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் பெயர் மொஹமட் அப்தல்லா மொஹமட் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த வருடத்தில் இடம்பெற்ற 23ஆவது கொலைச் சம்பவமாக இது உள்ளது.

## டொரன்டோ நகர நடைபாதைகளில் புதிய குப்பைத்தொட்டிகள் அறிமுகம்

ஒன்ராறியோ, ஏப்ரல் 26

டொரன்டோ நகர சபையானது, டொரன்டோ நகர நடைபாதைகளில் புதிய குப்பைத்தொட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

நகரத்தின் வீதியோரங்களில் வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான குப்பைத்தொட்டிகைள அகற்றி, மீள் வடிவமைக்கப்பட்ட குப்பைத் தொட்டிகளை வைக்கவுள்ளது.

ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள குப்பைத்தொட்டிகள் சரியாக வடிவமைக்கப்படவில்லை என டொரன்டோ நகர மேயர் ஒலிவியா சோவ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதத்தில் மேயராக தெரிவு செய்யப்பட்டது முதல் பல வீதிக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்ட தன் அடிப்படையில், மேலும் சுத்தமான வீதிகளுக்கான தேவை இருப்பதனை தாம் அறிந்து கொண்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.





# கெஃபியே ஆடை அணிந்து வந்த உறுப்பினரை வெளியேறப் பணிப்பு

## ஒன்ராரியோ மாகாண சபையில் சம்பவம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 26

ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் சாரா ஜமா மாகாண சபை அமர்விலிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

ஒன்ராரியோ மாகாண சபையான குயின்ஸ் பார்க்கில் தடை செய்யப்பட்டுள்ள கெஃபியேவை அணிந்து வந்தமைக்காகவே அவரை அவையிலிருந்து வெளியேறுமாறு மாகாண சபாநாயகர் டெட் ஆர்னொட் உத்தரவிட்டுள்ளார்.

எனினும், அவையிலிருந்து வெளியேறுவதற்கு ஜமா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அராபியர்கள் மற்றும் முஸ்லிம்கள் அணியும், பலஸ்தீனியர்களுடனான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் அடையாளமாக மாறியுள்ள கெஃபியேவை குயின்ஸ் பார்க்கில் அணிவதற்கு கடந்த வாரத்தில் சபாநாயகர் தடை விதித்திருந்தார்.

முதல்வர் டக் ஃபோர்ட் உள்ளடங்கலாக, ஒன்ராரியோ அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நால்வரும் இந்த தடையை நீக்குமாறு கோரியிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில், முதல்வரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, மாகாண அவையினை நடத்துவது சபாநாயகர் எனவும், அது அவரது தெரிவு எனவும் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

# நகரங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் அல்பேர்ட்டா மாகாண அரசு முஸ்தீபு!

அல்பேர்ட்டா, ஏப்ரல் 26

நகரங்கள் மீது எல்லையற்ற அதிகாரத்தை மாகாண அரசாங்கத்திற்கு வழங்கும் சட்டமூலம் ஒன்றை அல்பேர்ட்டா அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதில் நகர சபை உறுப்பினர்களை பதவி நீக்கல், நகர சபைச் சட்டங்களை வலிதற்றதாக்கல் மற்றும் தேர்தல்களை ஒத்திவைத்தல் என்பன உள்ளடங்குகின்றன.

மாநகர தலைவர்களின் நியாயமான தேர்தல்கள் மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்வதற்காகவே இந்த அதிகாரங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன என மாநகர விவகாரங்கள் அமைச்சர் ரிக் மெக்ஐவர் தெரிவித்துள்ளார்.

நகர சபை உறுப்பினர்களை பதவி நீக்கும் அதிகாரமானது நிலைமைக்கு ஏற்றவாறு மாகாண முதல்வர் டேனியல் ஸ்மித்தின் அமைச்சரவையால் எடுக்கப்படும் என அமைச்சர் மெக்ஐவர் குறிப்பிட்டுள்ளார்.

# அலிஸ்டனில் ஹொண்டா அமைக்கும் இலத்திரனியல் வாகன பட்டரி ஆலை



ஒன்ராரியோ, ஏப்ரல் 26

ஒன்ராரியோவின், அலிஸ்டன் பகுதியில் இலத்திரனியல் வாகன பட்டரி தயாரிக்கும் ஆலை ஒன்றை ஹொண்டா நிறுவனம் நிர்மாணிக்கவுள்ளது.

ஒன்ராரியோ மாகாணத்தில் ஜப்பானிய வாகனத் தயாரிப்பாளர்களுக்கு வழங்குவதற்கான மின்கலங்கள் இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இந்த தொழிற்சாலை நிர்மாணத்திற்கு அரசாங்கத்தினால் 5 பில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

இந்த தொழிற்சாலையின் நிர்மாணம் தொடர்பான அறிவிப்பு ஏப்ரல் 25ஆம் திகதி பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் ஆகியோர் கலந்துகொண்டனர்.